**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO I, SATTUR**

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC.06/2022 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw-13 |
| Deposition of witness for | Defence |
| | Court |

Name : திருமதி.தேவமாதா(காவல் ஆய்வாளர்)

Father's Name :

Village :

Taluk :

Age :

1 முதல் 9 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 மனுவானது இணையவழியாக பதிவேற்றம் செய்யப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

03.02.2026

<u>முதல் விசாரணை</u>

நான் தற்பொழுது தமிழ்நாடு காவல் துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்று விருதுநகர், முத்துராமன்பட்டியில் வசித்து வருகிறேன். கடந்த 07.08.2021ம் தேதி சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். அன்றைய தினம் சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.10/2019, சட்டப்பிரிவுகள் – 294(பி), 494, 506(1) இதச வழக்கு கோப்பை பார்வையிட்டு இவ்வழக்கின் சாட்சி சுலோஜனாவை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

14.11.2021ம் தேதி சாட்சிகள் சுலோஜனா, கார்த்திக்ராஜா ஆகியோர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம்

சட்டப்பிரிவான– 294(பி), 494, 506(1) இதசவை 294(பி), 494, 506(1), 498(A) இதச உ/இ 120(B) இதசவாக மாற்றம் செய்து சட்ட மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யபடுகிறது.**

25.11.2021ம் தேதி சாட்சி முத்துக்குமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே சாட்சி பாலசுப்பிரமணியன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 28.12.2021ம் தேதி சாட்சி கணபதி, முருகேஸ்வரி, அறிவுகண்ணு, ரவிசந்திரா ஆகியோர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 03.01.2022ம் தேதி சாட்சி திலகராஜ் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 14.02.2022ம் தேதி எனது விசாரணை முடித்து எதிரிகள் மீது தலைமறைவு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**1 முதல் 6 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1) என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.6 ஆனது எந்த அச்சகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் பத்திரிக்கையில் அச்சகம் குறித்த விபரங்கள் எதுவும் அச்சிடப்படவில்லை. பொதுவாக ஒரு திருமண பத்திரிக்கையில் அச்சகம் குறித்து விபரம் இருக்கும் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. பத்திரிக்கையானது யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்றால் வாதியிடமிருந்து கைப்பற்றப்பட்டது, அதுகுறித்து சாட்சி எதுவும் இவ்வழக்கில் போடவில்லை. பத்திரிக்கையை தவிர்த்து 1ம் எதிரிக்கும், 7ம் எதிரிக்கும் திருமணம் நடந்தது குறித்து வேறு எந்த சாட்சியமும் போடவில்லை என்றால் ஆவண சாட்சியம் போடவில்லை.

2) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திருமதி.ரேவதி என்பவரை விசாரணை செய்யவில்லை என்றால் வழக்கு கோப்பை பார்வையிட்டேன், நான் விசாரிக்கவில்லை, ஏன் என்றால் எனக்கு முன்பு இருந்த அதிகாரி விசாரித்துள்ளார். நான் தான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

3) இந்த வழக்கின் அனைத்து சாட்சிகளின் வாக்குமூலம், ஆவணங்கள் குறித்து எனக்கு நன்றாக தெரியும் என்றால் ஆவணங்களை பார்வையிட்டதிலிருந்தும், நான் விசாரித்த சாட்சிகளை வைத்தும் எனக்கு நன்றாக தெரியும். அ.சா.1 சாத்தூர்

அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நேரடியாக ஆஜராகி புகார் அளித்தார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. அதே போல் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கும் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ எந்த புகாரும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல, மேற்படி கூறிய சங்கதிகளை குறிப்பிட்டு தனது புகாரில் கூறியுள்ளார். அ.சா.1 மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு புகார் அனுப்பியிருந்தால் அதுகுறித்து எங்கள் காவல் நிலையத்திற்கு தகவல் வந்தடைந்து, அதன் பேரில் நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கும் என்றால் வழக்கு கோப்பில் இல்லை, ஆனால் நிலைய ஆவணங்களில் பதிவு செய்ய வாய்ப்புள்ளது. அதன் பேரில் எடுத்து நடவடிக்கையும் பற்றியும் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்பு அதில் பதிவு செய்யப்பட்டிருக்கும்.

4) நான் தாக்கல் செய்திருக்கும் குற்ற இறுதியறிக்கையில் மாவட்ட கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தோ, ஆவணம் குறித்தோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் நடப்பு தாளில் உள்ள சங்கதிகள் இந்த புகாரில் உள்ளபடி இருந்தால் அதுபற்றி குறிப்பிடப்படமாட்டாது. அ.சா.1 மாவட்ட கண்காணிப்பாளரிடம் எவ்வித புகாரும் கொடுக்கவில்லை என்றும், அதனால் தான் மேற்கூறிய நடவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

5) 156(3) குவிமுச படி தாக்கல் செய்யப்பட்ட மனுவை குறித்து எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் அதுகுறித்து புகார்தாரர் குறிப்பிடவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் 156(3) குவிமுச–ன் படி சி.ஆர்.எம்.பி.எண்.1188/2019, எந்த தேதியில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. அதில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவானது விசாரித்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் Investigate and Report என்று குறிப்பிடப்பட்டுள்ளது, Investigate என்றாலே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட வேண்டும்.

6) மேற்படி சி.ஆர்.எம்.பி.எண்.1188/2019 உத்தரவை சரிவர பரிசீலனை செய்யாமல் சார்பு ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. 20.06.2019 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதை பெண் காவலர் திருமதி.கலா என்பவர் 22.06.2019 அன்று காவல் நிலையத்தில் கொடுத்துள்ளார் என்றால் அதுகுறித்த சான்றுகள் வழக்கு கோப்பில் இல்லை. அவ்வாறு உத்தரவானது

காவல் நிலையத்திற்கு கொண்டு வந்தது குறித்து எதுவும் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு எதுவும் காவல் நிலையத்தில் பதிவு செய்வது கிடையாது.

7) நீதிமன்றத்திலிருந்த பெற்ற தபாலை 10 நாட்கள் கழித்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றும், அதற்கான காலதாமத்திற்கு தனிப்பட்ட காரணம் எதுவும் உண்டா என்றால் அதுகுறித்து நான் விசாரிக்கவில்லை. 1ம் எதிரிக்கும், அ.சா.1 க்கும் 2015 ம் ஆண்டிலிருந்தே பிரச்சனை இருந்துள்ள விபரம் எனது விசாரணையில் தெரியவந்துள்ளதா என்றால் தெரியவந்துள்ளது. 2015 ஆண்டிலிருந்தே 1ம் எதிரியும், அ.சா.1 ம் சேர்ந்து வாழவில்லை என்றால் சரிதான்.

8) சி.சி.எண்.23/2018 வழக்கில் எ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்ட ஆவணத்தில் 25.01.2017 ம் ஆண்டிலேயே எனக்கு என் கணவருடன் சேர்ந்து வாழ தான் விருப்பம் இருந்தாலும், என் கணவர் நீதிமன்றம் மூலம் வாழ்க்கை பிரச்சனையை பார்த்துக் கொள்வதாக கூறிவிட்டதால், நானும் நீதிமன்றம் மூலம் தீர்த்து கொள்கிறோம் என்று இருதரப்பினரும் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் அந்த ஆவணம் குறித்து எனக்கு தெரியாது. சி.சி.எண்.23/2018 வழக்கில் எ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்ட ஆவணத்தில் நானும், முத்துபாண்டி என்பவரும் தவறான பழக்கத்தில் இருந்தது கணவருக்கு தெரிந்து பிரச்சனை ஏற்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மனு ரசீதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

9) சி.சி.எண்.23/2018 வழக்கில் 1, 2, 3, 4, 6 எதிரிகள் இவ்வழக்கிலும் எதிரிகளாக காட்டப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எதிரிகள் விடுதலையான விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஒரே குற்றத்திற்கு 1ம் எதிரியும், அ.சா.1ம் சேர்ந்து வாழவில்லை என்ற விபரம் தெரிந்தும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சரிவர விசாரணை செய்யாமல், சரியான ஆவணங்கள் இன்றி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், ஒரு தலைபட்சமாக செயல்பட்டேன் என்றால் சரியல்ல. நானே சி.சி.எண்.23/2018 ல் விசாரணை அதிகாரியாக இருந்தும், இவ்வழக்கிலும் விசாரணை அதிகாரியாக இருந்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

10) எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சொல்லப்பட்ட சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**(1 முதல் 6 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 7 முதல் 9 எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்ளபட்டதாக தெரிவிக்கப்பட்டது).**